பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 06 2026** **06 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நித்தி ஆயோகின் ஆட்சிமன்றக் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

2. சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இரவு நேரங்களில் ஏற்படும் மின்தடைகளை விரைந்து சீர்செய்யும் வகையில், 10 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் உயர் அலுவலர்களாக பணியாற்றி வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் கூறியுள்ளார்.

4. மறைந்த திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் தேனி மாவட்டம் தேவதானப்பட்டி அருகே இன்று நடைபெற உள்ளது.

5. தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் மலைப் பகுதிகள் மற்றும் தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நிதி ஆயோகின் ஆட்சிமன்றக் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற உள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் முதலமைச்சர்கள், துணைநிலை ஆளுநர்கள் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடையும் நோக்கில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பது இந்த ஆண்டு நிதி ஆயோக் கூட்டத்தின் கருப்பொருளாகும்.

வயது, பிராந்தியம், பாலினம் அல்லது சமூகப் பொருளாதார பின்னணி பேதம் இல்லாமல் அனைவரது நல்வாழ்விலும் வளர்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை அடைவதற்கான அணுகுமுறை குறித்து இந்த ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

நாட்டில் தொழில்முனைவை ஊக்குவித்தல், திறன்மேம்பாட்டை அதிகரித்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், சுகாதாரம்,

ஊட்டச்சத்து, நலவாழ்வு ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற தலைமைச் செயலாளர்கள் மாநாட்டின் பரிந்துரைகள் குறித்து இந்த நிதி ஆயோக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இரவு நேரங்களில் ஏற்படும் மின்தடைகளை விரைந்து சீர்செய்யும் வகையில், 10 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து மண்டலங்களிலும் இரவு நேர ரோந்துப் பணிக்காக 125 வாகனங்களின் சேவை தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இப்பணிக்காக 500க்கும் மேற்பட்ட பொறியாளர்கள், களப்பணியாளர்கள் உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மின்தடை குறித்து பெறப்படும் புகார்கள் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியாகும் தகவல்கள் தொடர்ந்து

கண்காணிக்கப்பட்டு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கடந்த 10 நாட்களாக சில பகுதிகளில் ஒரே மாதிரியான மின்தடை சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுவதால் அவற்றின் பின்னணி குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அண்மையில் காற்றாலை மின் உற்பத்தி குறைந்த காரணத்தால் அதிக பயன்பாடுள்ள நேரங்களில் சில இடங்களில் தற்காலிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எனினும் மாநிலத்தில் போதுமான மின் உற்பத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின் விநியோக பிரச்சினைகள், விநியோக அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகளால் ஏற்பட்டதாகவும், மின் பற்றாக்குறையால் ஏற்படவில்லை என்றும் திரு. நிர்மல் குமார் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் உயர் அலுவலர்களாக பணியாற்றி வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்கி அவர் பாராட்டு தெரிவித்தார்.

பின்னர் பேசிய அவர், மாணவர்கள் எந்த பாடப் பிரிவுகளில் ஆர்வம் உள்ளவர்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்துமாறு ஆசிரியர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களுக்கு ஊக்கமுடைய வார்த்தைகளையும், நேர்மறையான கருத்துகளையும் தெரிவிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

மாணவர்கள், ஆசிரியர்களை மதித்து நன்றாக கல்வி கற்க வேண்டும் என்றும் திரு. ராஜ்மோகன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

மறைந்த திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் தேனியில் இன்று நடைபெற உள்ளது.

அவரது உடல் சொந்த ஊரான தேவதானப்பட்டி அருகே காட்ரோடு பகுதியில் உள்ள பண்ணை வீட்டில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு மேல் அன்னாரது உடல் நல்லடக்கம் செய்யப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மறைந்த பாரதிராஜாவின் உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட உள்ளதையடுத்து, அதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட டிஐஜி திரு. சசிமோகன் நேற்று ஆய்வு செய்ததாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாடு முழுவதும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் சேர்க்கை முகாம்கள் மூலம் தொழில் பழகுநர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த முகாம் நாமக்கல் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Kannan - 46 Sec)**

நாமக்கல்லில் நடைபெற்ற இந்த முகாம், தங்களுக்கு பயனுள்ளதாக அமைந்தது என்று இப்பயிற்சியில் பங்கேற்றுள்ள பயனாளிகள் தெரிவித்தனர்.

**(Voice Byte - Beneficiaries - 35 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவில் தங்கள் குழந்தைகளை பிரசவித்து, குடியுரிமை பெற அந்நாட்டிற்கு சென்ற ஐரோப்பா, ஆப்பிரிக்காவை சேர்ந்த நூற்றுக்கணக்கானோரின் விசாக்களை அமெரிக்கா ரத்து செய்துள்ளது.

-----------

பல்கேரியா சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அந்நாட்டுப் பிரதமர் திரு. **Ruman Radev**-ஐ சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தினார்.

-----------

மேற்குவங்கத்தில் முதலீடு செய்வது தொடர்பாக இந்திய வர்த்தக சபை பிரதிநிதிகள் மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கை சந்தித்துப் பேசினர்.

-----------

இந்தியாவில் இருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்வதற்கு நேபாள அரசு எந்தவித தடையும் விதிக்கவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

-----------

மயிலாடுதுறை ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் அமைச்சர் திரு. வெங்கட்ரமணன் தலைமையில் நடைபெற்றது.

-----------

விழுப்புரம் மாவட்டம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பட்டமளிப்பு விழாவில் மருத்துவப் படிப்பு முடித்த 90 பேருக்கு அமைச்சர் திரு. அருண்ராஜ் பட்டங்களை வழங்கினார்.

-----------

பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு எழுத சிறப்பு அனுமதி திட்டத்தில் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்று வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

-----------

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே சட்டவிரோதமாக பட்டாசு கருந்திரியை தயாரித்தபோது ஏற்பட்ட விபத்தில் பெண் தொழிலாளர் ஒருவர் உயிரிழந்தார்.

-----------

ராணிப்பேட்டையில் வேளாண்துறை, வேளாண் வணிகம், விதை சான்றளிப்பு தொடர்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திருமதி பிரியா தலைமையில் நடைபெற்றது.

-----------

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு அருகே காவல்துறை அதிகாரிபோல் போலியாக சீருடை அணிந்திருந்த பெண் ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-----------

திருவள்ளூர் மாவட்டத்தில் ரயில்வே மேம்பாலம் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி கவிதா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

-----------

சென்னையில் உள்ள 19 மண்டலங்களில் நாளை மறுநாள் பொது விநியோக திட்ட மக்கள் குறைதீர் முகாம் நடைபெற உள்ளது.

-----------

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் மலைப் பகுதிகள் மற்றும் தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களின் சில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**<<<<The End>>>>**